கிருபை மலர்

மலர் 9 ஏப்ரல் - 2018 இதழ் : 4

"இருந்தவரும்".... இருக்கிறவரும் வருகிறவருமாகிய
சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்
"பரிசுத்தர்"... பரிசுத்தர்.... பரிசுத்தர் .... " – வெளி 4:8

தனிப்பிரதி ரூ.10/- ஆண்டுச் சந்தா ரூ.100/-

உங்கள் சகோதரியிடமிருந்து...

என் அன்பு கிருபை குடும்பத்தினரே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நமது அலுவலகத்தின் அனைத்து தொலைபேசி எண்களும் ஏர்செல் நெட்வொர்க் தடையினால் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டது. மறுபடியும் அந்த எண்கள் கிடைக்கும்படி முயற்சிக்கிறோம். தற்போது உங்கள் வசதிக்காக புதிய எண் ஒன்றையும் தெரியப் படுத்துகிறோம். எங்களது தொலைபேசி : 99442 54902, 0422 - 2445255

வேதாகம புதையல் – IIIக்கான வினாத்தாள் ஆயத்தமாயுள்ளது. பதிவு கட்டணமாக ரூ.100/– செலுத்தி வினாத்தாளை பெற்றுக் கொள்ளுங்கள்.

(ஏப்ரல்) April மாத கடைசி வாரத்தில் **Kirubai Kids Camp** 23.04.2018 முதல் 28.04.2018 நடத்த திட்டமிட்டுள்ளோம். மறவாமல் ஜெபியுங்கள். வருடத்தில் 3 முறை சிறுவருக்கென சிறுவர் இதழ் ஒன்று வெளியிடுகிறோம். உங்கள் குழந்தைகளுக்கான இந்த இதழை பெற்றுக் கொள்ள விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

மார்ச் மாத ஊழியங்களில் எல்லாம் தேவ வல்லமை வெளிப்பட்டது. ஏப்ரல் மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

“இருந்தவரும்.... இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர்... பரிசுத்தர்.... பரிசுத்தர் ....” – வெளி 4:8

துதிக்குப் பாத்திரராகிய கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

கிறிஸ்துவின் பணியில் அன்பு சகோதரி

Sis. ஷீலா விஜயகுமார்

வெளிப்படுத்தின விசேஷம்

Bible Study 10

ஏழு சபைகளைக் குறித்தும் தியானிக்க ஆவியானவர் உதவி செய்தார். வெளிப்படுத்தின விசேஷம் 3-ம் அதிகாரத்துடன் சபைகளுக்கான செய்தி முடிகிறது. தொடர்ந்து இம்மாதம் 4-ம் அதிகாரத்தைக் குறித்துத் தியானிப்போம்.

4:1 இவைகளுக்குப் பின்பு, இதோ பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காள சத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது இங்கே ஏறி வா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது.

இவைகளுக்குப் பின்பு

இதன் அர்த்தம் என்ன? எவைகளுக்குப் பின்பு என்று கேள்வி எழும்புகிறதா? அதாவது சபைகளின் காலத்திற்குப் பின்பு (அல்லது) இரகசிய வருகைக்குப் பின்பு, என்று அர்த்தம்.

பரலோகத்தில் திறக்கப் பட்டிருந்த வாசல் :-

வானம் திறக்கப்படும் பொழுது தேவப் பிரசன்னம் அதிகமாய் இறங்கும். வெளி 1-ம் அதிகாரத்தில் இயேசுவைப் பற்றிய தரிசனத்தை யோவான் காண்கிறார். இங்கே பிதாவைக் குறித்த தரிசனத்தைப் பார்க்கிறார்.

வானம் திறக்கப்பட்டால் நமக்கு நேரே பரலோகம் தெரியும். அப்பொழுது அங்கேயிருக்கும் சந்தோஷத்தை தேவப் பிரசன்னத்தை நாம் அனுபவிக்க முடியும்.

4:2 உடனே ஆவிக்குள்ளானேன். அப்பொழுது இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்.

முதல் வசனத்தின் இறுதியில் 'ஏறிவா' என்ற சத்தம் கேட்டது என்று வாசிக்கிறோம். அந்த சத்தத்தைத் தொடர்ந்து யோவான் ஆவிக்குள்ளாகிறார். ஆவியானவரின் ஆளுகைக்குள் வருவதே ஆவிக்குள்ளாகுதல். வானம் திறக்கப்பட்ட உடன் ஆவிக்குள்ளாக முடியும். ஆவிக்குள்ளான யோவான் முதலில் பார்ப்பது சிங்காசனம் . சிங்காசனம் என்ற வார்த்தை வெளிப்படுத்தின விசேஷத்தில் மட்டும் 37 முறை வருகிறது.

சிங்காசனம் என்பது, ''ஆளுகையின் அடையாளத்தை''

குறிக்கும். பரலோகில் வீற்றிருக்கும் பிதாவின் ஆளுகையையும் அதிகாரத்தையும் இது குறிக்கும்.

<u>4:3</u> வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார். அந்த சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது. அது பார்வைக்கு மரகதம் போல தோன்றிற்று.

வச்சிரக்கல் என்றால் ஆங்கிலத்தில் Jasper. இது வெண்மை ஒளி வீசும். வெண்மை-தேவ மகிமையையும், பரிசுத்தத்தையும் குறிக்கிறது. வச்சிரக்கல் என்பது உறுதியானது. விலையுயர்ந்தது. இந்தக் கல் வைலட் கலரில் இருக்கும்.

பதுமராகம் என்றால் "Sardine". இது இரத்த சிவப்பு நிறத்தில் இருக்கும். கிறிஸ்துவின் தியாகத்தைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து இரத்தத்தினால் ஜனங்களை மீட்டுக் கொண்டு பரலோகில் சேர்க்கிறார். பிசாசு இந்நிறத்தைக் காப்பி அடித்து வெள்ளிக் கிழமைகளில் தன் ஜனத்தை சிவப்பு நிற ஆடை அணியச் செய்து நித்திய நரகத்துக்கு அனுப்புகிறான்.

வானவில் :- மரகதம் போன்ற வானவில், பொதுவாய் வானவில் "VIBGYOR" என்ற நிற வரிசையில் காணப்படும். மரகதம் பச்சைக் கலரில் இருக்கும். பச்சை நிறமானது செழிப்பின் அடையாளம். சிங்காசனத்தைச் சுற்றி வானவில் என்பது கிருபையின் அடையாளமாய் இருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னம் கிருபையாய் வெளிப்படும்.

<u>4:4</u> அந்த சிங்காசனத்தைச் சூழ இருபத்து நான்கு சிங்காசனங்களிருந்தன. இருபத்து நான்கு மூப்பர்கள் வெண் வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி, அந்த சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன்.

24 சிங்காசனங்கள். அதாவது 24 இருக்கைகள் அல்ல; அவைகளும் சிங்காசனங்களே! 24 மூப்பர்கள் உட்காரும் சிங்காசனம். மூப்பர்கள் சிங்காசனத்தில் வெண் வஸ்திரம் தரித்து, பொன்முடி சூடி உட்கார்ந்திருப்பதை அப் யோவான் பார்க்கிறார்.

இவர்கள் என்ன செய்கிறார்கள்?

1. சிங்காசனத்தில் வீற்றிருப்பது (4:4)
2. சத்தமாய் தேவனை ஆராதிப்பது (4:9-11)
3. கிரீடத்தை சிங்காசனம் முன் வைப்பது (4:10)
4. சிங்காசனம் முன் வணக்கமாய் விழுவது (4:10)
5. சுரமண்டலங்களுடன் பாடுவது (5:8-10)
6. தேவனுக்கு தூபவர்க்கம் செலுத்துவது (5:8)

7. யோவானுக்கு இரகசியங்களை அறிவிப்பது (5:5) போன்ற வேலைகளைச் செய்கிறார்கள்

ஒரு பிரதான ஆசாரியனுக்கு 24 ஆசாரியர் இருப்பார்கள். கிறிஸ்து ஆட்டுக் குட்டியாய் மரித்து பிரதான ஆசாரியனாய் உயிர்த்தெழுந்ததால் அவருக்கு 24 மூப்பர்கள். தேவனாகிய கர்த்தர் இந்த மூப்பர்களை தன்னுடன் உட்கார வைத்திருக்கிறார். இவர்கள் தேவனை ஆராதிக்கிறார்கள். தேவன் இவர்களை கனம் பண்ணி தன்னுடன் உட்கார வைத்திருக்கிறார்.

4:5 அந்த சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடி முழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன. தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன.

மின்னல், இடி முழக்கம், சத்தம் எல்லாம் சிங்காசனத்திலிருந்து புறப்பட்டன என்பதிலிருந்து இது நியாயத் தீர்ப்பின் சிங்காசனம் என்பது தெளிவாகிறது.

7 ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள்

7 ஆவிகள் என்பது பரிசுத்தாவியானவரின் 7 செயல்பாடுகளைக் குறிக்கும். **ஏசா 11:2**-ல் உள்ளபடி

1. ஞானத்தை அருளும் ஆவியானவர்
2. உணர்வை அருளும் ஆவியானவர்
3. ஆலோசனை அருளும் ஆவியானவர்
4. பெலனை அருளும் ஆவியானவர்
5. அறிவை அருளும் ஆவியானவர்
6. கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை அருளும் ஆவியானவர்
7. பரிசுத்தத்தை அருளும் ஆவியானவர் என ஏழு செயல்பாடுகள்.

4:6 அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடலிருந்தது. அந்த சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன. அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன.

கண்ணாடிக்கடல் என்பது பளிங்கு போல சுத்திகரிப்பை விளக்கும். நான்கு ஜீவன்கள் என்பது கர்த்தரின் குணாதிசயத்தைக் குறிப்பதாக சிலர் கூறுகிறார்கள். கிறிஸ்துவின் மனிதத்துவம், தியாகம், ஆளுகை, ஆசாரியத்துவம் இவைகளைக் குறிப்பதாகவும், மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற நான்கு சுவிசேஷங்களை குறிப்பதாகவும் வேத ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

4:7 முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷ முகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவு மிருந்தன.

சிங்கம் என்பது பெலனையும், தைரியத்தையும் குறிக்கும். காளை கடின உழைப்புக்கு அடையாளம். மனுஷ முகம் என்பது தலைமைத்துவத்தையும் அறிவையும் குறிக்கும். கழுகு உயரத்தில் பறப்பதைக் குறிக்கும்.

4:8 அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவளுமாயிருதன. அவைகள் இருந்தவரும் இருக்கிறரும் வருகிறவருமாகிய சர்வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.

24 மணி நேரம் ஓய்வில்லாமல் கர்த்தரை துதிக்கின்றதைக் காணலாம்.

4:9-11 மேலும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து, சதா காலங்களிலும் உயிரோடிருக் கிறவருக்கு அந்த ஜீவன்கள் மகிமையையும், கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும் போது இருபத்து நான்கு மூப்பர்களும், சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதா காலங்களிலும் உயிரோடிருக் கிறவரைத் தொழுது கொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து கர்த்தாவே, தேவரீர், மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரரா யிருக்கிறீர். நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர். உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக் கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவை களுமாயிருக்கிறது என்றார்கள்.

மகிமையையும், கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தினர். துதியானது சுகந்த வாசனையாயிருக்கிறது. பெருமையிலிருந்து நம்மை இறக்கி கர்த்தருக்காய் பயன்பட துதியானது நம்மைப் பக்குவப்படுத்தும்.

நீரே சிருஷ்டிகர் என்று ஆராதிக்கிறார்கள். அவர் சித்தப்படியே எல்லாம் உண்டானது. ஆமென்! அல்லேலூயா!!

தொடரும்

எங்களது வெளியீடுகள்

1. அப்பா உம்மை
2. இயேசுவின் கிருபை இன்னிசை பாடல்கள்
3. நடக்கச் சொல்லித்தாரும் இயேசுவே - (பாகம் 1)
4. நடக்கச் சொல்லித்தாரும் இயேசுவே - (பாகம் 2)
5. அவர் யார்?
6. சார்ந்து கொள்ளுங்கள்
7. நெருக்குதலா? நெருங்குதலா?
8. பவுலும், சீலாவும்
9. மனிதனைத் தவிர
10. சிந்திப்போம் ! செயல்படுவோம் !! (பாகம் 1)
11. சிந்திப்போம் ! செயல்படுவோம் !! (பாகம் 2)
12. சிந்திப்போம் ! செயல்படுவோம் !! (பாகம் 3)
13. சிந்திப்போம் ! செயல்படுவோம் !! (பாகம் 4)
14. சிந்திப்போம் ! செயல்படுவோம் !! (பாகம் 5)
15. எது முக்கியம் ?
16. அறிந்து கொள்வோமா ?
17. Topper ஆகனுமா ?
18. Dear யூத்ஸ்
19. Daddy I Praise You
20. பெண்ணே! உனக்காக
21. அற்புதப் பெண்ணே! உனக்காக
22. அழகுப் பெண்ணே! உனக்காக
23. போராட்டமும் கொண்டாட்டமும்
24. இனி காலம் செல்லாது
25. தூற்றுக் கூடை
26. சிலுவையின் மேன்மை
27. நாளுக்கொரு ஜெபம்
28. நீங்கள் கார்த்தரைத் தேடினால்
29. ஹலோ குட்டீஸ்
30. Hello Chutties
31. Hello பட்டூஸ்
32. இராஜ்யமும் ஆளுகையும்
33. திறவுகோல்
34. ஆவியின் பட்டயம்
35. Have a Blessed Day
36. யூதருக்கு ராஜா
37. மௌனமா? மறதியா?
38. உணர்வில்லாத இருதயம்
39. உங்களுக்குத் தான்
40. இலேசான காரியம்

பாடுகள்

கிறிஸ்துவின் அத்தனை விசாரணையும் முடிந்தது. முந்தின நாள் இரவு முழுவதும் உறக்கம் இல்லை. இரவெல்லாம் நிற்க வைத்தே விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை முடிந்ததும் வாரினால் அடிக்கப்படும்படி ஒப்புக் கொடுக்கப்பட்டார். ஒருவனை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுப்பதற்கு முன்பு முதலாவதாக அவன் வஸ்திரங்களை உரிந்துக் கொடூரமான சாட்டையினால் நாற்பதுக்கு ஒன்று குறைய 'அடி,அடி' என்று அடிப்பது வழக்கம். அந்த சாட்டையில் இரும்பு, முள், எலும்பு, ஆணிகள் இணைக்கப்பட்டிருக்குமாம். அடிக்கும் போர் வீரன் தன் முழு பெலத்தையும், காண்பித்து அடிப்பானாம்.

முதுகில் அல்லது அதன் கீழாக அடிப்பார்களாம். ஒவ்வொரு அடியின் போதும் சவுக்கு உடலில் பற்றிக் கொள்ளும். சவுக்கை இழுக்கும் போது, சதையைப் பிய்த்துக் கொண்டுவரும். ஒரே அடியில் ஒன்பது இடத்தைக் கிழிக்கும் வாரினால் அடித்தார்களாம். முதுகு உழுத நிலம் போல மேடு பள்ளங்களான கோடுகளாயிற்று.

''உழுகிறவர்கள் என் முதுகின் மேல் உழுது; தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள்'' – சங் 129:3.

வாரினால் அடிக்கும்பொழுது இயேசுவின் ஆடைகளைக் களைந்திருப்பார்கள். அவருடைய ஆடையைத் தனியே வைத்துவிட்டுச் சிகப்பான வேறொரு அங்கியை உடுத்தினார்கள். காயப்பட்ட உடலில் துணியைப் போடுவதும், எடுப்பதும் எவ்வளவு வேதனையானது. நம் காலில் சிறு முள் குத்தினாலும் எத்தனை வேதனை தருகிறது. கிறிஸ்துவின் தலையிலோ முள்ளினால் கிரீடம் செய்து வைத்தார்கள். மட்டுமல்ல அதை கோலினால் அடித்து இறுக்குகிறார்கள். கொடிய வேதனையை சகித்தார். முள் கிரீடத்தை அடித்ததினிமித்தம் முட்கள் ஆழமாய் குத்தின காயங்கள் உண்டு.

நமது தீமையான எண்ணங்களுக்கு நாம் பெற வேண்டிய தண்டனைக்குப் பதிலாகக் கிறிஸ்துவின் தலையில்

முட்கிரீடம் வைத்துக் கோலால் அடித்தனர். இயேசுவை அடித்து நொறுக்கி, பின் பாரமான சிலுவை சுமத்தி, அதை கொல்கொதா வரையிலும் சுமக்கச் செய்தார்கள்.

''அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்து கொண்டு எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப் போனார் ''
-யோவான் 19:17.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடத்துக்கு கபாலஸ்தலம் என்றும், கொல்கொதாவென்றும் மத் 27:33, மாற் 15:22 மற்றும் மேலேயுள்ள வசனத்திலும் சொல்லப் பட்டிருக்கிறது. லூக் 23:33ல் கபாலஸ்தலம் என்று மட்டும் எழுதப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கிலேய வேதாகமத்தில் 'கல்வாரி' என்ற சொல் வருகிறது. 'கொல்கொதா' என்றால் 'தலையோடு' என்று அர்த்தமாம்.

பாரமான சிலுவையை சுமக்கமுடியாமல், தள்ளாடி தள்ளாடி சுமந்து செல்கிறார். பலமுறை கீழே விழுந்தார். உடலில் சவுக்கடி, முகத்தில் அறைந்து துப்பினார்கள். தலையில் குட்டினார்கள். வார்த்தைகளால் ஏளனம் செய்தார்கள். முட்கள் தலையில் இருந்த நரம்புகளைப் பாதித்தது. அடிகளே அவர் மரணத்திற்குப் போதுமானது என்று சொல்லுமளவு இருந்தது. தான் அறையப்பட வேண்டிய சிலுவை மரத்தை அவரே தூக்கிச் சென்றார். நிர்வாணமாய் சிலுவையில் தொங்க வேண்டும்.

கொல்கொதா சென்றதும், இப்பொழுது சிலுவையில் அவரை அறைகின்றனர். இரண்டு கைகளையும் சிலுவை மரத்தோடு சேர்த்து வைத்து ஆணிவைத்து அறைந்தனர். இரண்டு கால்களையும் சேர்த்து வைத்து ஒரே ஆணியால் சிலுவை மரத்தோடு அறைகின்றனர்.

உகாண்டா தேசத்திலே 'இடி அமீன்' என்ற சர்வாதிகாரி தனக்குப் பிடிக்காதவர்களை சாக்கடைக்கு முன்பாக வரிசையாக நிறுத்துவானாம். முதல் ஆள் சுட்டவுடனே அவன் துடிக்க துடிக்க சாக்கடைக்குள் விழுவான். துப்பாக்கிச் சூட்டின் காயங்களிலிருந்து இரத்தம் வழியும். அடுத்தவன் அவனைத் தூக்கிக் கொண்டு வந்து, அடக்கம் பண்ணும் குழியில் போட்டுவிட்டு தான் சுடப்படுவதற்காக வந்து நிற்க வேண்டுமாம். எத்தனை கொடூரம் பாருங்கள். இயேசுவும் சிலுவை மரணம் இப்படி

இருக்கும் என்று தெரிந்தே மனப்பூர்வமாய் இந்தப் பாடுகளை ஏற்றுக் கொண்டார்.

''அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக் கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை'' - ஏசா 50:6.

சிலுவை மரணம் கொடிய வேதனை நிறைந்தது. ஆணிகளின் பெலத்தினால் கிறிஸ்து சிலுவையில் தொங்குகிறார். சிலுவையில் தொங்கும் கிறிஸ்துவுக்கு உச்சந்தலை முதல், உள்ளங்கால் வரை காயங்கள். சீக்கிரம் உயிரும் பிரியாதாம். சிலர் மூன்று, நான்கு நாட்கள் கூட தொடர்ந்து தொங்கிக் கொண்டிருக்க நேரிடுமாம். அப்பொழுதெல்லாம் காட்டு மிருகங்கள் கால்களை கடிக்க நேரிடும். கழுகுகள் கண்களைப்பிடுங்க நேரிடுமாம். கசப்புக் கலந்த காடியை கிறிஸ்துவுக்கு கொடுக்கிறார்கள். ஒரு சேவகன் ஈட்டியால் விலாவில் குத்துகிறான்.

''போர்ச் சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது''. - யோவா 19:34.

ஈட்டியால் குத்தப்பட்டது மற்ற நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்படவில்லை. இயேசுவின் மரணத்தை அருகிலிருந்து நேரில் பார்த்த யோவான் இந்நிகழ்ச்சியை எழுதியுள்ளார். இருதயத்தைச் சூழ இருக்கும் உறை போன்ற பகுதியையும், இருதயத்தையும் ஈட்டி குத்திக் கிழித்ததால் நீரும், இரத்தமும் வெளிவந்தன என்று வேத ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

அடிகளே அவர் மரணத்திற்குப் போதுமானது என்று சொல்லுமளவு இருந்தது. ஆனால் அதற்கு மேலும் இத்தனை பாடுகள். மத்திய நரம்பில் ஆணி வைத்து அடிக்கும் போது மோசமான வலி ஏற்பட்டு முதுகுத் தண்டுவடத்தின் மூலம் சரீரம் முழுவதும் வலி ஏற்படுத்தும். சரீரத்தின் ஒவ்வொரு அசைவின் போதும் பயங்கரமான வலி ஏற்படும். மூச்சுவிடும் போதெல்லாம் வலியை அனுபவிக்க நேரிடும். தென்றல் காற்று வீசும் போதும் சரீரம் வலியால் துடித்திருக்கும் என்கின்றனர் மருத்துவர்கள்.

''மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்... நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர்

காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்''. - ஏசா 53:4,5.

பாடுபடும்படி கிறிஸ்துவை யாரும் கட்டாயப்படுத்த வில்லை. நம்மை நேசித்ததால் கிறிஸ்து பாடுகளை ஏற்றுக் கொண்டார். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் நமக்கு தேவையான பாவ மன்னிப்புக் கிடைத்தது. மட்டுமல்ல, சுகம், ஆரோக்கியம், வெற்றி, நன்மை, ஆசீர்வாதம் என அத்தனையும் நமக்குக் கிடைத்திருக்கிறது.

1963-ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார். அடுத்து நடந்த ஜனாதிபதி தேர்தலில் அவரது சகோதரர் ராபர்ட் கென்னடி போட்டியிட்டார். ஒரு நாள் தேர்தல் கூட்டம் ஒன்றில் அவர் பேசிக் கொண்டிருந்தபோது அவரும் சுட்டு வீழ்த்தப்பட்டார். அவர் இரத்த வெள்ளத்தில், மிகுந்த வேதனையில் துடித்துக் கொண்டிருந்தார். கண்கள் மூடியிருந்தன. அந்த நேரத்திலும் தன்னைச் சூழ்ந்திருந்த நண்பர்களை தொட்டுப்பார்த்து எல்லாரும் பத்திரமாக இருக்கிறீர்களா? என்று கேட்டாராம். எத்தனை கரிசனை! சாகும் தருவாயிலும் நீங்களும் நானும் நன்றாயிருக்க வேண்டும் என்ற கரிசனை தான் நம் அருள் நாதருக்கும்.

''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்''. - யோவா 3:16.

இயேசு கிறிஸ்துவின் இத்தனை பாடுகளுக்கும் காரணம், பிதாவாகிய தேவன் நம்மீது கொண்ட அன்பல்லவா! கிறிஸ்து ஒரே முறை அடிக்கப்பட்ட வேதனையை உணரும் விசுவாசிகள் மறுமுறை அவரை அறையும் நிலையில் வாழத் துணியமாட்டார்கள். அன்பின் ஆழமான வெளிப்பாடாய் அத்தனை காயங்களையும் ஏற்றுக் கொண்டார்.

உருகாயோ நெஞ்சமே நீ
குருசினில் அந்தோ பார்
கரங்கால்கள் ஆணியேறி
திருமேனி நையுதே

5 நிமிடம் ப்ளீஸ்.....

ஒவ்வொரு நாளும் காலை 6.00 மணி முதல் 6.05 வரை ஒரு ஐந்து நிமிடம் மட்டும் நமது கிருபை ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். கிருபை கட்டிடத்திற்காய் 5 நிமிடம் ஜெபியுங்கள்

ப்ளீஸ் ... ப்ளீஸ் ...

நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோம் !

தொலைபேசி எண்களின் மாற்றத்தை தெரிந்து கொள்ளுங்கள்

99442 54902,

0422-2445255

WEBSITE & YOU TUBE

Website : www.graceofchrist.org

You Tube-ல் சகோதரியின் செய்திகளைக் கேட்க

grace of christ jesus

என்ற பெயரில் பார்க்கவும். உங்கள் உறவினருக்கும், நண்பர்க்கும் கூட அறிமுகப்படுத்துங்கள்

என்ன கிடைக்கும் ?

துதித்தால்	–	தடைகள் உடையும்
ஜெபித்தால்	–	ஜெயம் உண்டாகும்
ஸ்தோத்தரித்தால்	–	கிருபை பெருகும்
பாடினால்	–	பாடுகள் விலகும்
ஆராதித்தால்	–	தேவ அனுபவம் கிட்டும்
விசுவாசித்தால்	–	எல்லாம் கூடும்
வேதம் வாசித்தால்	–	தேவ குரல் கேட்கும்
வேதத்தின்படி நடந்தால்	–	தேவ பிள்ளையாவோம்
உண்மையாயிருந்தால்	–	பரிபூரண ஆசீர்வாதம்
பரிசுத்தமாயிருந்தால்	–	பரமனை தரிசிக்கலாம்
உதவி செய்தால்	–	உதவிகள் கிடைக்கும்
கொடுத்தால்	–	கொடுக்கப்படும்
தாழ்மை	–	உயர்வைத் தரும்
இச்சைகள்	–	இழிவை உண்டாக்கும்
இருதய சுத்தம்	–	தேவ தரிசனம் தரும்
குடும்ப ஜெபம்	–	பாதுகாவல் உண்டாக்கும்
ஐக்கியம்	–	தேவ சித்தம்
ஒரு மனம்	–	தேவ திட்டம்
அன்பு	–	தேவ குணாதிசயம்
வாழ்க்கை	–	ஒரே முறை
தேவனுக்காக வாழும் வாய்ப்பு	–	ஒரே முறை
தேவனுக்காக வாழ்ந்தால்	–	தலைமுறைக்கும் ஆசீர்வாதம்

செய்திகள்

* அமெரிக்காவின் 1 சென்ட் நாணயத்தை வடிவமைத்தவர் பெஞ்சமின் பிராங்க்ளின் அதிலுள்ள ஃப்யூஜியோ என்ற வார்த்தைக்கு லத்தீனில் நான் பறக்கிறேன் என்று அர்த்தம்.
* ஸ்வீடனிலுள்ள சில பல்கலைக் கழகங்களில் இரவு பத்து மணிக்கு மாணவ, மாணவிகள் கோரஸாக கத்துகிறார்கள். இதற்கு Flogsta Scream என்று பெயர். மன அழுத்தம் போக்க செய்யும் முயற்சியாம் இது.
* கூகுள் ஆராய்ச்சியாளர்கள் கண்களை ஒய்வு செய்து அதன் மூலம் இதய நோய்களைக் கண்டுபிடித்துள்ளனர். ஒருவரின் வயது, ரத்த அழுத்தம், புகைபிடிப்பவரா இல்லையா ஆகிய விவரங்களை அறிவதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் விகிதத்தை கண்டுபிடிக்கிறார்கள்.

வேதாகம புதையல் III

* வேதாகம புதையல் IIIக்கான வினாத்தாள் தயார் நிலையில் உள்ளது.
* வினாத்தாளைப் பெற்றுக் கொள்ள Registration fees Rs. 100/-ஐ செலுத்தி முன் பதிவு செய்த கொள்ளுங்கள்.
* ஏப்ரல் மாதம் 25-ம் தேதி வினாத்தாள் அனுப்பி வைக்கப்படும்.
* ஜுன் 5-ம் தேதிக்குள் எங்கள் கரங்களில் விடைகள் கிடைக்க வேண்டும்.

C.S.I. St Paul's Church, Dindugal
ஆலய கன்வென்ஷன் கூட்டங்கள்

Owned and Published by Sis. A. Sheela Packiaselvi, No. 10. R.K.N. Layout, North Street, Venkitapuram, Coimbatore - 13.
and Printed at Garuda Graphics, 79, D.B. Road, R.S. Puram, Coimbatore - 641 002. Ph : 0422-2542555
Editor : Sis. A. Sheela Packiaselvi, Ph. : 0422 - 2445255

Regd. with Registrar of News Paper
for India under No. TN TAM 18992 / 2009
Postal Registration No. TN/CB/137/2016-2018

Licence to post with pre-payment
Date of Publications 03.04.2018
MONTH AT BPC, CBE, HO - 641 001

CSI Church, Bhilai, Chattishghar State

எங்கள் முகவரி:

சகோதரி. ஷீலா விஜயகுமார்

''கிறிஸ்து இயேசுவின் கிருபை''
17, R.K.N. லே-அவுட், வெங்கிட்டாபுரம்,
கோயம்புத்தூர் - 641 013.
செல் : **99442 54902** போன் : **0422 2445255**
E-mail : jesusgraceministries@gmail.com